# வாரம் 02

# அமர்வு 02

# தேசிய மற்றும் மாகாண வரவுசெலவுத்திட்டம்

வாரம் 02
அமர்வு 02

All Rights Reserved © 2023
Verité Research

# கலந்துரையாடப்படும் பகுதிகள்

1. அரசாங்க வரவுசெலவுத்திட்ட சுழற்சிக்கான பின்னணி

2. தேசிய வரவுசெலவுத்திட்ட சுழற்சி (பிரதான கட்டங்கள், பிரதான நிறுவனங்கள் மற்றும் முக்கிய வெளியீடுகள்)

3. சட்டக் கட்டமைப்பின் கண்ணோட்டம்

4. நிதியை பெற்றுக்கொள்ளும் பிரதான வழிமுறைகள்

5. வரவுசெலவுத்திட்டம் தொடர்பான சில முக்கிய சிக்கல்கள்

6. தேசிய வரவசெலவுத்திட்டத்தில் ஊடகவியலாளர்களின் ஈடுபாடு

7.மாகாண வரவசெலவுத்திட்டம் (வரவசெலவுத்திட்ட சுழற்சி, சட்ட கட்டமைப்பு,பிரதான நிறுவனங்கள் மற்றும் நிதியளிப்பு)

All Rights Reserved © 2023
Verité Research

# 1. அரசாங்க வரவுசெலவுத்திட்ட சுழற்சிக்கான பின்னணி

All Rights Reserved © 2023
Verité Research

# அரச வரவுசெலவுத்திட்டம்


## அரச வரவு செலவுத்திட்டம் என்றால் என்ன?

1. இது தேசிய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் முதன்மை பொது அரச நிதி ஒதுக்கீடு மற்றும் கண்காணிப்பு பொறிமுறையாகும்.
2. இது அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள் மற்றும் சட்டப்பூர்வ சபைகள் உட்பட அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட நிதி இலக்குகளை அடைவதற்காக செலவின முகவர் மற்றும் தொடர்புடைய திறைசேரி திணைக்களங்களுடன் கலந்தாலோசித்து உருவாக்கப்படுகிறது. அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட நிதி இலக்குகள் மற்றும் வளர்ச்சி இலக்குகளை அடைவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

All Rights Reserved © 2023
Verité Research

# 2. தேசிய வரவுசெலவுத்திட்ட சுழற்சி

# இலங்கையின் வரவுசெலவுத்திட்ட சுழற்சி




**ஜூன்**

தேசிய கணக்காய்வாளர் அலுவலகம் அனைத்து பொது அதிகார சபைகளினதும் கணக்குகளை கணக்காய்வு செய்யும். பாராளுமன்றக் குழுக்கள் ஆண்டு அறிக்கைகளை பொதுமக்களுக்கு வெளியிடுவதற்கு முன் நிதி ஆவணங்கள் மற்றும் வெளிவாரிக் கணக்காய்வுகளை மதிப்பீடு செய்யும்.

**ஜனவரி - டிசம்பர்**

இக்காலகட்டத்தில் வரவுசெலவுத்திட்ட நிறைவேற்றம் நடைபெறுகிறது.

**ஜூலை நடுப்பகுதி**

தேசிய வரவு செலவுத் திணைக்களம் (NBD) நிதியாண்டிற்கான பேரின-நிதி கட்டமைப்பைத் தயாரித்து அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் மாகாண சபைகளுக்கு வரவுசெலவுத் திட்ட அழைப்பை வெளியிடுகிறது.

**ஜூலை இறுதி**

செலவின முகவர்கள் (SA) குறித்த ஆண்டிற்கான நிதித் திட்டங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

**ஆகஸ்ட் - செப்**

தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் (NBD) செலவினப் பரிந்துரைகள் மற்றும் வரைவு ஒதுக்கீட்டு மசோதாக்களை முடிவு செய்ய செலவின முகவர்களுடன் (SA) ஆலோசனை செய்கிறது.

**அக்டோபர் ஆரம்பம**

அமைச்சரவையின் அங்கீகாரம் மற்றும் வர்த்தமானியில் சட்டமூலம் வெளியிடப்பட்டதன் பின்னர் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் முதல் வாசிப்பு இடம்பெறுகின்றது.

**நவம்பர் ஆரம்பம் – நடுப்பகுதி**

நிதியமைச்சர் ஆற்றிய வரவு செலவுத் திட்ட உரையுடன் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு இடம்பெறுகின்றது.

**நவம்பர் நடுப்பகுதி - டிசம்பர்**

குழு விவாதங்கள் மற்றும் பாராளுமன்றம் வரவு செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பின் போது மூன்றாவது வாசிப்பு இடம்பெறுகின்றது.

*மூலம்: 2003 ஆம் ஆண்டின் 3ம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்பு) சட்டம்.*
*இலங்கை பாராளுமன்றம், "அரசாங்கத்தின் சட்டங்கள்" (திகதியிடப்படாதது). இல் இருந்து பெறப்பட்டது: https://www.parliament.lk/how-parliament-works/government-bills.*
*இலங்கை பாராளுமன்றத்தின் நிலையான கட்டளைகள், இலங்கையின் பாராளுமன்ற நடைமுறைகள் (2002).*

All Rights Reserved © 2023
Verité Research

# 01ஆம் கட்டம்: வரவுசெலவுத்திட்ட வடிவமைப்பு செயல்முறை

**பொறுப்புகூறும் தரப்பு: அரசாங்கத்தின் நிறைவேற்று நிர்வாகம்**

**காலப்பகுதி: முந்தைய நிதியாண்டின் ஏப்ரல் - நவம்பர்**

**ஏப்ரல் - ஜூன்**

செலவின முகவர்கள் *(SA)* ஆரம்ப மதிப்பீடுகளைத் திட்டமிட்டு நிதி ஆண்டிற்கான தயாரிப்புகளைத் ஆரம்பிக்கின்றன

**ஜூலை ஆரம்பம்**

மத்திய கால பேரின-நிதி கட்டமைப்பை ஒப்புதலுக்காக அமைச்சரவைக்கு வழங்குதல்

**ஜூலை நடுப்பகுதி**

அமைச்சுகள் மற்றும் திணைகளங்களுக்கு வரவுசெலவுத்திட்ட அழைப்பினை விடுத்தல்

**ஜூலை இறுதி**

செலவின முகவர்கள் நிதித் திட்டங்களைச் சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது

**ஆகஸ்ட் - செப்**

தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம் *(NBD)* செலவுத் திட்டங்களை முடிவு செய்ய செலவின முகவர்களுடன் *(SA)* ஆலோசனை செய்கிறது

**ஆக்டோபர்**

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் வரைவு செய்யப்பட்டு, சமர்ப்பிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு, சட்டமூலத்தின் முதல் வாசிப்புக்கு ஒரு வாரத்திற்கு முன்னர் வர்த்தமானியில் வெளியிடப்படுகிறது.

**நவம்பர்**

வரவு செலவுத்திட்ட உரை நிதி அமைச்சரால் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகிறது

மூலம்: *UNICEF வரவுசெலவுத்திட்ட சுருக்கம் (2019) மற்றும் வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு அளவுகோல் அறிக்கை (பணியில் உள்ளது)*

All Rights Reserved © 2023
Verité Research

# 02ஆம் கட்டம்: வரவுசெலவுத்திட்ட ஒப்புதல் பெறும் செயல்முறை

**பொறுப்புகூறும் தரப்பு : அரசாங்கத்தின் சட்டவாக்க அமைப்பு - பாராளுமன்றம்**

**காலப்பகுதி : முந்தைய நிதியாண்டின் செப்டம்பர்-டிசம்பர்**

### செப்டம்பர் இறுதியில்

ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை அமைச்சர்களின் சபைக்கு சமர்ப்பிக்கும்

போது, அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.

### அக்டோபர் ஆரம்பம்

முதல் வாசிப்பு

நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் தாக்கல் செய்யப்படுகிறது.

### நவம்பர் ஆரம்பம் - நடுப்பகுதி

இரண்டாவது வாசிப்பு

வரவுசெலவுத்திட்ட உரை மற்றும் மதிப்பீடுகள்

பாராளுமன்ற விவாதங்கள் (அதிகபட்சம் 7 நாட்கள்)

பாராளுமன்ற வாக்கெடுப்பு

### நவம்பர் நடுப்பகுதி - டிசம்பர்

மூன்றாவது வாசிப்பு

குழு நிலை விவாதங்கள் (அதிகபட்சம் 22 நாட்கள்)

பாராளுமன்ற வாக்கெடுப்பு

### டிசம்பர்

தேசிய வரவுசெலவுத்திட்டம் அங்கீகரிக்கப்படுதல்.

ஒதுக்கீட்டு சட்டமூலம் மற்றும் வரவுசெலவுத்திட்ட உரையில் உள்ள அனைத்து நிகழ்ச்சிகளும் உள்ளடக்கியது.

*மூலம்: UNICEF வரவுசெலவுத்திட்ட சுருக்கம் (2019) மற்றும் வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு அளவுகோல் அறிக்கை (பணியில் உள்ளது)*

All Rights Reserved © 2023
Verité Research

# 03ஆம் கட்டம்: வரவுசெலவுத் திட்டத்தை செயற்படுத்தல்

**பொறுப்புகூறும் தரப்பு : நிதி அமைச்சு, தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களம் (NBD), செலவின முகவர்கள் (SAs), திறைச்சேரி செயல்பாட்டுத் திணைக்களம் (TOD)**

**காலப்பகுதி : வரவுசெலவுத்திட்ட ஆண்டின் ஜனவரி 1 முதல் டிசம்பர் 31 வரை**

வாரன்ட் : பணம் பெறுபவருக்கு ஒரு குறிப்பிட்ட திகதிக்குள் பணம் செலுத்துவதற்கான எழுத்துப்பூர்வ ஆணை.
KPI: பிரதான செயல்திறன் குறிகாட்டிகள் (KPIகள்) பிரதான நோக்கங்கள் எவ்வளவு திறம்பட பூர்த்தி செய்யப்படுகின்றன என்பதைக் காட்டுகின்றன.
காசுப்பாய்ச்சல் : உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் நிதிகளின் விபரங்கள்.
முற்பணம்: செலவின நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டிய கடன் மற்றும் நிதியின் முன்பணம்.

- செலவு செய்யும் முகவர் நிறுவனங்களுக்கு நிதியை வழங்குவதற்கான உத்தரவாதத்தில் (வாரன்ட்) நிதியமைச்சு கைச்சாத்திடும். பின்வருவனவற்றிலிருந்து நிதி விடுவிக்கப்படுகிறது.
  1. ஒருங்கிணைந்த நிதி
  2. சிறப்பு சட்டப்பூர்வ நிதி
  3. முற்பண கணக்கு செயல்பாடுகள்
- செலவு செய்யும் முகவர் நிறுவனங்கள் தங்கள் இலக்குகள் மற்றும் முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளை எட்டுவதற்கான நடவடிக்கை/ கொள்முதல் திட்டங்களைத் தயாரித்து அவற்றை NBD க்கு சமர்ப்பிக்கும்
- தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களம் காசுப்பாய்ச்சலைத் தயாரிக்கும்.
- திறைச்சேரி செயல்பாட்டுத் திணைக்களம் (TOD) செலவின முகவர்களுக்கு (SA) முற்பணத்தை வழங்குகிறது.
- செலவின முகவர்கள்(SA) செலவினங்களைத் தொடங்குகின்றன

All Rights Reserved © 2023
Verité Research

# 04ஆம் கட்டம் : நிறுவன மற்றும் பொதுமக்கள் மேற்பார்வை

### அரச மற்றும் பொதுமக்கள் மேற்பார்வை வடிவங்கள்

**வரவுசெலவுத்திட்டம் மீதான நிறுவன மேற்பார்வை**

நிதி அமைச்சு

- தேசிய வரவுசெலவுத்திட்டம் திணைக்களம்
- கருத்திட்ட கண்காணிப்பு மற்றும் முகாமைத்துவத் திணைக்களம்

பாராளுமன்றம்

- அரச நிதி ஆணைக்குழு
- அரச கணக்குகள் ஆணைக்குழு
- **அரச நிறுவனங்கள் ஆணைக்குழு**

தேசிய கணக்காய்வாளர் அலுவலகம்

**பொதுமக்கள் மேற்பார்வை**

தனியார் துறை/வர்த்தக சபைகள்

சிந்தனைக் குழுக்கள்/கல்வித்துறை/CSO

ஊடகம்

சிவில் சமூக அமைப்புகள்

All Rights Reserved © 2023
Verité Research

# வரவுசெலவுத்திட்ட சுழற்சியில் ஈடுபட்டுள்ள பிரதான முகவர்கள்

# நிதி அமைச்சு

| | |
|---|---|
| தேசிய **வரவுசெலவுத்திட்ட** திணைக்களம் *(NBD)* | பட்ஜெட் ஒதுக்கீடு செயல்பாட்டில் முக்கிய நிறுவனமாகும். வரவு செலவுத் திட்டத்தை உருவாக்குவதிலும், தேசிய வரவுசெலவுத்திட்டத்தின் இறுதி ஒதுக்கீடு முடிவுகளை பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்படுவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. |
| **தேசிய திட்டமிடல் திணைக்களம்.(*NPD*)** | செலவின முகவர்களால் (SA) முன்மொழியப்பட்ட மூலதனத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிப்பதற்கும், அரசாங்கத்தின் நடுத்தர கால பொது முதலீட்டுத் திட்டத்தை (PIP) தயாரிப்பதற்கும் பொறுப்பு வகிக்கிறது. |
| வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் (*ERD*) | வெளிப்புற நிதிகளின் ஒருங்கிணைப்பு, பேச்சுவார்த்தை மற்றும் திரட்டுதல் மற்றும் இந்த நிதிகள் தேசிய வரவுசெலவுத்திட்டம் மூலம் அனுப்பப்படுவதை உறுதி செய்தல் ஆகியவற்றிற்கு பொறுப்புடையது. கடன் முகாமைத்துவ அமைப்பு மூலம் அரசாங்கக் கடன் பட்டியலை பராமரிப்பதன் மூலம் அரசாங்க வெளிநாட்டு கடனை நிர்வகிக்கிறது. |
| நிதிக் கொள்கைத் திணைக்களம் *(FPD)* | தேசிய அளவிலான ஒட்டுமொத்த செலவு மற்றும் வருவாய்க் கட்டுப்பாடுகளைக் காட்டும் முக்கியமான ஆவணமான அரசாங்கத்தின் நடுத்தர கால பேரின நிதி கட்டமைப்பு *(MTMFF)* உருவாக்கும் பொறுப்புடையது. |

*மூலம்: நிதி அமைச்சு, மாகாண சபை அதிகாரிகள் மற்றும் வரிசை அமைச்சுகளின் அதிகாரிகளுடன் நடாத்தப்பட்ட முக்கிய தகவலறிந்த நேர்காணல்கள்| ஆசிய அபிவிருத்தி வங்கி. பொது நிதி முகாமைத்து அமைப்புகள். 2018. | நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு. 2011. ஒரு வழிகாட்டி:* ***வரவுசெலவுத்திட்ட*** *செயல்முறை. கொழும்பு | UNICEF* ***வரவுசெலவுத்திட்ட*** *சுருக்கம்:* ***வரவுசெலவுத்திட்ட*** *சுழற்சி மற்றும் செயல்முறைகள். 2019*

All Rights Reserved © 2023
Verité Research

**நிதி ஆணைக்குழு (FC)**

- மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண சபைகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்துபவரின் பாத்திரத்தை வகிக்கிறது மற்றும் இரு தரப்பினர்களுக்கும் இடையிலான பரிவர்த்தனைகளை எளிதாக்குகிறது.

**மாகாண சபைகளுக்குப் பொறுப்பான அமைச்சு**

- தற்போது மாகாண சபைகளுக்குப் பொறுப்பான அமைச்சு பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு (MLGPC) ஆகும்.
- குறிப்பாக வெளிநாட்டு நிதியுதவி திட்டங்களுக்கு அரசாங்கம் மற்றும் மாகாண சபைகளுக்கு இடையில் ஒரு ஒருங்கிணைப்பாளராக அமைச்சு செயல்படுகிறது.
- மாகாண சபைகளால் நேரடியாக வெளிநாட்டு நிதியைப் பெற முடியாது என்பதால், மாகாண சபைகளால் நடைமுறைப்படுத்தப்படும் நன்கொடையாளர்களின் நிதியுதவி அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிறைவேற்று முகவராக அமைச்சு செயற்படுகிறது.

**செலவின முகவர்கள் (SAs)**

- செலவின நிறுவனங்களில் அமைச்சுகள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சட்ட சபைகள் மற்றும் மாகாண சபைகள் ஆகியவை அடங்கும். அரசாங்க முன்னுரிமைகள் மற்றும் அவற்றின் சொந்தத் துறைத் திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் வேலைத் திட்டங்களுக்கு ஏற்ப அந்தந்த முகவர்களின் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிப்பது மற்றும் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களுடன் (NBD) பேச்சுவார்த்தை நடத்துவது செலவின முகமவர்களின் (SAs) பங்காகும்.

**அமைச்சரவை**

- நடுத்தர கால பேரின-நிதி கட்டமைப்பு (MTMFF) போன்ற முக்கிய ஆவணங்கள் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட வேண்டும். தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தால் (NBD) தயாரிக்கப்பட்ட ஒதுக்கீட்டுச் சட்டமூலம், நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன், அமைச்சர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

**பாராளுமன்றம்**

- இலங்கையின் அரசியலமைப்பின் படி, இலங்கையின் பொது நிதிகள் மீதான முழுக் கட்டுப்பாட்டையும் பாராளுமன்றம் கொண்டுள்ளது.
- பாராளுமன்றத்தில் 24 நாள் விவாதம் அங்கீகரிக்கப்பட்டு சட்டமாக மாறும் இறுதி விதிகளை தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

*மூலம்: நிதி அமைச்சு, மாகாண சபை அதிகாரிகள் மற்றும் வரிசை அமைச்சுகளின் அதிகாரிகளுடன் நடாத்தப்பட்ட முக்கிய தகவலறிந்த நேர்காணல்கள்| ஆசிய அபிவிருத்தி வங்கி. பொது நிதி முகாமைத்து அமைப்புகள். 2018. | நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு. 2011. ஒரு வழிகாட்டி: வரவுசெலவுத்திட்ட செயல்முறை. கொழும்பு | UNICEF வரவுசெலவுத்திட்ட சுருக்கம்: வரவுசெலவுத்திட்ட சுழற்சி மற்றும் செயல்முறைகள். 2019*

All Rights Reserved © 2023
Verité Research

# வரவுசெலவுத்திட்ட மேற்பார்வை: பிரதான முகவர்கள் மற்றும் பொறுப்புகள்

**நிர்வாக கிளை**

**உள்ளக கணக்காய்வு தொகுதி (IAUs)**
ஒவ்வொரு செலவின முகவர்களினதும் (SA) நிதி மற்றும் செயல்பாட்டு தொகுதிகளில் இருந்து சுயாதீனமாக இயங்கும் IAU ஐக் கொண்டுள்ளது.

**தேசிய கணக்காய்வு அலுவலகம்**
தே. க.அ. அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களிலும் உள்ள பொது நிறுவனங்களை கணக்காய்வு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளது.

**தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களம்**

**திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களம்**

**சட்டவாக்க அமைப்பு**

**அரச நிதி ஆணைக்குழு (COPF)**
1. வரவுசெலவுத்திட்ட சிக்கல்கள் மற்றும் நிதி முடிவுகளை மதிப்பிடுவதற்கு நிதியாண்டில் வழங்கப்பட்ட நிதி ஆவணங்களின் மதிப்பீடு.
2. சட்டமன்ற மேற்பார்வையில் உள்ள இடைவெளிகளை நிரப்புதல்.

**அரச நிறுவனங்கள் ஆணைக்குழு (COPE)**
1.அனைத்து பொது நிறுவனங்கள், அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள், அறக்கட்டளை நிதிகள் மற்றும் சிறப்பு சட்டரீதியான நிதிகளின் மேற்பார்வை.
2. முன்–பின் விமர்சனங்கள்

**அரச கணக்குகள் ஆணைக்குழு (COPA)**
1. அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் மேற்பார்வை
2. முன்–பின் விமர்சனங்கள்

All Rights Reserved © 2023
Verité Research

# வரவுசெலவுத்திட்டம் தொடர்பான முக்கிய ஆவணங்கள்

**வரவுசெலவுத்திட்ட அழைப்பு (Budget Call)** - நிதி அமைச்சினூடாக செலவின முகவர்களுக்கு அவர்களின் செலவின முன்மொழிவுகளைக் கோரி அனுப்பப்படும் ஆவணம், இது நடுத்தர கால வரவுசெலவுத்திட்ட கட்டமைப்பிற்கு ஏற்ப இருத்தல் வேண்டும்.

**நடுத்தர-கால பேரின-நிதி கட்டமைப்பு** - அரசாங்கத்தின் நிதி இலக்குகள், செலவின முன்னுரிமைகள் மற்றும் வருமான கணிப்புகள் ஆகியவற்றை ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் கோடிட்டுக் காட்டும் ஒரு மூலோபாய திட்டமிடல் கருவி, பொதுவாக மூன்று முதல் ஐந்து ஆண்டுகள் வரை நீடிக்கும்.

**ஒதுக்கீட்டு மசோதா** - ஒரு நிதியாண்டில் குறிப்பிட்ட நோக்கங்களுக்காக பொது நிதியை செலவழிக்க அரசாங்கத்தை அங்கீகரிக்கும் ஒரு சட்ட முன்மொழிவு.

**வரவுசெலவுத்திட்ட உரை** - வரவு செலவுத்திட்ட உரை என்பது நிதியமைச்சரின் வருடாந்தம் நிகழ்த்தப்படும் உரையாகும், இது வரவிருக்கும் நிதியாண்டிற்கான அரசாங்கத்தின் முன்மொழியப்பட்ட வருமான மற்றும் செலவினத் திட்டங்கள், கொள்கை முன்னுரிமைகள் மற்றும் பொருளாதாரக் கண்ணோட்டத்தை முன்வைக்கிறது.

**வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகள் (வரைவு)** - வரவிருக்கும் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்திற்கான முன்மொழிவாக அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்ட பூர்வாங்க கணிப்புகள் மற்றும் வருமான மற்றும் செலவு ஒதுக்கீடுகள்.

**அரசிறை முகாமைத்துவ அறிக்கை** - பேரின குறிகாட்டிகள், உள்நாட்டு மற்றும் உலகளாவிய சந்தைகள், நிதி முன்னேற்றங்கள் மற்றும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் செயல்திறன் பற்றிய தகவல்களை வழங்குகிறது. பெரும்பாலான குறிக்கட்டிகளுக்கு ஒவ்வொரு நிதியாண்டினதும் ஆகஸ்ட் வரை தகவல்கள் பொதுவாக வழங்கப்படும். இது நடுத்தர கால நிதி மூலோபாயம் மற்றும் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் அடிப்படை ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

**ஒதுக்கீட்டுச் சட்டம்** - வரவுசெலவுத்திட்டத்தின் மூன்றாவது மற்றும் இறுதி வாசிப்பின் அடிப்படையில், அந்தந்த வரவுசெலவுத்திட்டத்தின் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு, ஒதுக்கீட்டுச் சட்டமூடாக செய்யப்படுகிறது. சம்பந்தப்பட்ட ஆண்டிற்கான அரசாங்கத்தின் கடன் வரம்புகளுக்கான சட்டத்தையும் நிறுவுகிறது.

All Rights Reserved © 2023
Verité Research

# வரவுசெலவுத்திட்டம் தொடர்பான முக்கிய ஆவணங்கள்

**வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகள் (அங்கீகரிக்கப்பட்ட)** – இவ் ஆவணம், திணைக்களம் மற்றும் சிறப்பு செலவினப் பிரிவு மூலம் செயல்திட்ட/ நிகழ்ச்சித்திட்ட ஒதுக்கீடுகள் பற்றிய மிகவும் விரிவான தகவல்களை வழங்கும் அரசாங்க செலவினங்களின் விரிவான விளக்கத்தை அளிக்கிறது.

**அரையாண்டு அரசிறை செயல்திறன் அறிக்கை** - பேரின குறிகாட்டிகள், உள்நாட்டு மற்றும் உலகளாவிய சந்தைகள், நிதி முன்னேற்றங்கள், அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் செயல்திறன் மற்றும் தொடர்புடைய நிதியாண்டின் முதல் நான்கு மாதங்களுக்கு வெளிநாட்டு நிதியுதவி பற்றிய இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குகிறது.

**நிதி அமைச்சின் ஆண்டறிக்கை** – பேரின நிதி பொருளாதார குறிகாட்டிகள், உள்நாட்டு மற்றும் உலகளாவிய சந்தைகள், அரசாங்க வருமானம், அரசாங்க செலவினங்கள், பணப்புழக்க முகாமைத்துவம், பற்றாக்குறை நிதியாக்கம் மற்றும் கடன், அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் செயல்திறன், பொது நிதி முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி நிதி குறித்து தொடர்புடைய நிதியாண்டுக்கான தகவல்களை வழங்குகிறது.

**வருடாந்த தேசிய கணக்காய்வு அறிக்கை-** தேசிய கணக்காய்வு அலுவலகத்தால் அடையாளம் காணப்பட்ட ஏதேனும் முறைகேடுகள், திறமையின்மைகள் அல்லது முன்னேற்றத்திற்கான பகுதிகளை எடுத்துக்காட்டுவதுடன், வருடாந்த தேசிய கணக்காய்வு அறிக்கைகள் அரசாங்கத்தின் நிதிநிலை அறிக்கைகள், பரிவர்த்தனைகள் மற்றும் செயல்பாடுகள் பற்றிய விரிவான மதிப்பீட்டை வழங்குகின்றன,

**குடிமக்கள் வரவுசெலவுத்திட்ட அறிக்கைகள் (Citizen’s Budget Report)** - குடிமக்கள் வரவுசெலவுத்திட்டம் என்பது தேசிய வரவுசெலவுத்திட்டத்தின் எளிமைப்படுத்தப்பட்ட மற்றும் அணுகக்கூடிய பதிப்பாகும், இது பொது மக்களுக்கு அரசாங்க வருமானம், செலவு மற்றும் கொள்கை முன்னுரிமைகள் பற்றிய தெளிவான மற்றும் புரிந்துகொள்ளக்கூடிய தகவல்களை வழங்க வடிவமைக்கப்பட்டுள்ளது.

All Rights Reserved © 2023
Verité Research

# 03. சட்டக் கட்டமைப்பு தொடர்பான கண்ணோட்டம்

All Rights Reserved © 2023
Verité Research

# அரச நிதி தொடர்பான பிரதான சட்டம்

**அரசியலமைப்பு (உறுப்புரை 148-153)** - பொது நிதிகளுக்கான அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் கொண்ட முக்கிய நிறுவனங்களை நிறுவுகிறது - குறிப்பாக "பொது நிதிகள் மீது முழுக் கட்டுப்பாடு" கொண்ட பாராளுமன்றத்தின் பங்கை வரையறுக்கிறது, பாராளுமன்றத்தை கலைப்பதற்கான ஜனாதிபதியின் அதிகாரங்கள் மற்றும் பொது நிதி மேற்பார்வையிடுவது கணக்காய்வாளர் நாயகத்தின் அதிகாரங்கள்

**அரசிறை முகாமைத்துவ பொறுப்புச் சட்டம் (FMRA)** - இச் சட்டம் அரச கடன், அரசாங்க பிணை மற்றும் பிற நிதிச் சட்டங்களின் மீதான கட்டுப்பாடுகளை விதிக்கிறது. பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை, அரையாண்டு அரசிறை நிலைமை அறிக்கை , வரவுசெலவுத்திட்ட இறுதி நிலைமை அறிக்கை மற்றும் தேர்தலுக்கு முந்தைய வரவுசெலவுத்திட்ட நிலைமை அறிக்கை போன்ற முக்கிய அரச நிதி ஆவணங்களை வெளியிடுவதற்கான காலக்கெடுவையும் வழங்குகிறது.

**தீவிரப் பொறுப்பு முகாமைத்துவம் -** இலங்கையில் பொதுப்படுகடன் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கும் அதனுடன் தொடர்புடைய அல்லது இடைநேர்விளைவான விடயங்களை ஏற்பாடு செய்வதற்கும் தீவிரப் பொறுப்பு முகாமைத்துவத்தின் நோக்கத்திற்காக இலங்கைக்குள் அல்லது வெளிநாட்டில் கடனை சேகரிப்பதற்கு அங்கீகாரம் அளிக்கிறது.

**நிதியியல் விதிமுறைகள்-** நிதியியல் விதிமுறைகள் (FR) நிர்வாகத்தால் பொது நிதிகளின் நடத்தையை நிர்வகிக்கும் விரிவான விதிகள் மற்றும் நடைமுறைகளை நிறுவுகிறது.

**பொதுப்படுகடன் சட்டம்** - உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச்சட்டம்/பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பங்குரிமைச்சான்றிதழ் கட்டளைச்சட்டம்/வெளிநாட்டு கடன் சட்டம்: திறைசேரி உண்டியல்கள் மற்றும் பங்குரிமைச்சான்றிதழ்களை நிர்வகிக்கும் நடைமுறைகளை உருவாக்குகிறது மற்றும் இலங்கை அரசாங்கத்தால் வெளிநாட்டுக் கடன்களைப் பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறது.

**வருமான சட்டங்கள்** - சுங்கச் கட்டளைச்சட்டம், உள்நாட்டு இறைவரிச் சட்டம், மதுவரிக் கட்டளைச்சட்டம், நிதிச் சட்டம், VAT சட்டம்: வருமான சேகரிப்புக்கான முதன்மைச் சட்டக் கட்டமைப்பை நிறுவுதல் (இருப்பினும் பல வகையான வருமானங்கள் பல்வேறு பிற சட்டங்கள் மூலமாக பெறப்படுகிறது: உதாரணம் - விசேட வியாபாரப் பண்ட அறவீடு .)


**ஒதுக்கீட்டுச் சட்டம்** - வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாவதும் இறுதியுமான வாசிப்பின் அடிப்படையில் ஒவ்வொரு அமைச்சுக்கும் சம்பந்தப்பட்ட வரவு செலவுத் திட்ட ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டை ஒதுக்கீடு சட்டம் வழங்குகிறது. ஆண்டுக்கான அரசாங்கத்தின் கடன் வரம்புகளையும் இச்சட்டம் ஊடாக நிறுவப்படுகிறது.

All Rights Reserved © 2023
Verité Research

# 05. நிதியளிக்கப்படும் பிரதான வழிமுறைகள்

All Rights Reserved © 2023

# 2022 இல் அரசாங்க செலவினங்களில் 45% மட்டுமே அரச வருமானத்தால் நிதியளிக்கப்பட்டது.




මූලාශ්‍රය: ශ්‍රී ලංකා මහ බැංකුවේ 2022 වාර්ෂික වාර්තාව

All Rights Reserved © 2023
Verité Research

# 06. வரவுசெலவுத்திட்டம் தொடர்பான சில முக்கிய சிக்கல்கள்

**சிக்கல் 01**
மோசமான மதிப்பீடு

**சிக்கல் 02**
வரவு செலவுத்திட்ட ஆவணங்களில் முரண்பாடுகள்


**சிக்கல் 03**
வரவு செலவுத்திட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் தோல்வி

**சிக்கல் 04**
வெளிப்படைத்தன்மையின் குறைபாடு

All Rights Reserved © 2023
Verité Research

# மதிப்பிடப்பட்ட வருமானம், செலவு மற்றும் வரவு செலவுத்திட்டம் நிலுவை ஆகியவற்றிலிருந்து பல ஆண்டுகளாக நிலையான விலகல்

பெறுமதிகள் ரூபா பில்லியனில்





** 2019 மற்றும் 2020க்கான தரவுகள் மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவற்றிலிருந்து வேறுபடுகின்றன, ஏனெனில் அரசாங்கம் 2019 இன் கீழ் 2020க்கான செலவினங்களை தவறாகக் குறிப்பிட்டுள்ளது.*

*மூலம்: மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கைகள்/ வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள்*

All Rights Reserved © 2023
Verité Research

# கடந்த 20 ஆண்டுகளாக, வரவு செலவுத்திட்ட வருமானத்தை விட உண்மையான வருமானம் குறைவாகவே உள்ளது.


**அரசாங்க வருமானம் (வரவுசெலவுத்திட்ட வருமானம் எதிர் உண்மையான வருமானம்), 2002-2023**




மூலம்: 2022 வரவு செலவுத்திட்ட அறிக்கை, வெரி ட்டே ரிசர்ச்

All Rights Reserved © 2023
Verité Research

# அரச வருமானம் 2022: மதிப்பிடப்பட்டதை விட உண்மையான வருமானம் 31% குறைவாக சேகரிக்கப்பட்டது.




மதிப்பீடுகளுக்கும் உண்மையான வருமானத்துக்கும் இடையே உள்ள ரூ.893 பில்லியன் இடைவெளி, அரசாங்கம் தனது வருமானத்தை துல்லியமாக மதிப்பிடவில்லை என்பதைக் காட்டுகிறது.

மூலம்: வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் 2022, நிதி அமைச்சின் ஆண்டறிக்கை 2022

All Rights Reserved © 2023
Verité Research

# பல்வேறு ஆவணங்களில் அறிக்கையிடப்பட்டுள்ள புள்ளிவிபரங்களின் முரண்பாடுகள் (2023)

பெறுமதிகள் ரூபா பில்லியனில்

| | வரவு செலவுத்திட்ட உரை (இணைப்பு 1) | | வரவு செலவுத்திட்ட மதிப்பீடு (வரைவு) | | முன்மொழிவுகள் (வரவு செலவுத்திட்ட உரை 2023) | வேறுபாடு |
|---|---|---|---|---|---|---|
| வருமானம் | 3,415 | - | 3,433 | | | -18 |
| செலவு | 5,819 | - | 5,854 | + | 49 | -84 |

குறிப்பு:

அ. (2023 வரவு செலவுத்திட்ட உரை) இணைப்பு 1 இல் கொடுக்கப்பட்டுள்ள படத்தில் இருந்து வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் (வரைவுகள்) மற்றும் முன்மொழிவுகளின் ஒருங்கிணைந்த புள்ளிவிவரங்களைக் கழிப்பதன் மூலம் வேறுபாடு கணக்கிடப்பட்டது.

ஆ. வருமானம் என்பது வரி வருமானம், வரி அல்லாத வருமானம், மானியங்கள் மற்றும் மாகாண சபை வருமானம் ஆகியவை அடங்கும்

மூலம்: வரவு செலவுத்திட்ட உரை மற்றும் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள்2023, 2023 வரவு செலவுத்திட்டத்திற்க்கான வெரிடே ரிசர்ச்சின் பொது அறிக்கை

All Rights Reserved © 2023
Verité Research

# *2022* இடைக்கால வரவு செலவுத்திட்ட வாக்குறுதிகளை செயல்படுத்துவதை மதிப்பீடு செய்தல்: வெரிட்டே ரிசர்ச்சின் ஆய்வினுடாக கண்காணிக்கப்பட்டது என்ன?

**24** வரவு செலவுத்திட்ட உரையில் குறிப்பிடப்பட்டுள்ள செலவின திட்டங்கள்

**5** வரவு செலவுத்திட்ட உரையில் குறிப்பிடப்பட்டுள்ள கொள்கைத் திட்டங்கள்

**18** செயல்படுத்துவதற்கு பொறுப்பான அரசு நிறுவனங்கள்


**50,500** ரூபா மில்லியன் (கண்காணிக்கப்பட்ட முன்மொழிவுகளின் மதிப்பு)

*குறிப்பு: 2022 (இடைக்கால) வரவு செலவுத்திட்ட உறுதிமொழிகள் அதிகபட்சமாக 24 செலவின திட்டங்கள் மற்றும் 5 ஒழுங்குமுறை முன்மொழிவுகளைக் கவனித்துள்ளன.'*
*மூலம்: அரசாங்க நிறுவனங்களில் தாக்கல் செய்யப்பட்ட தகவல் அறியும் உரிமைக் கோரிக்கைகளுக்குப் பதில் பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் செய்யப்பட்ட வெரிட்டே ரிசர்ச்சின் கணக்கீடுகள்.*

All Rights Reserved © 2023
Verité Research

# சராசரியாக* 2017- 2022 காலகட்டத்தில், வாக்குறுதிகளில் 15% மட்டுமே "நிறைவேற்றப்பட்ட" என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

*முன்னேற்றத்தின் வரலாற்று ஒப்பீடு, 2017- 2022 (இடைக்காலம்)*




மூலம்: சம்பந்தப்பட்ட அமைச்சுகளில் தாக்கல் செய்யப்பட்ட த.அ.உ (RTI) கோரிக்கைகளின் அடிப்படையிலான தகவல்.
குறிப்பு: குறிப்பு: 2022 (இடைக்கால) வரவு செலவுத்திட்ட உறுதிமொழிகள் அதிகபட்சமாக 24 செலவின திட்டங்கள் மற்றும் 5 கொள்கைத் திட்ட முன்மொழிவுகளைக் கவனித்துள்ளன.'
* சராசரியாகக் கருதப்படும் காலம் 2017 முதல் 2022 வரை (இடைக்காலம்).

All Rights Reserved © 2023
Verité Research


# செயல்படுத்துவதற்கு யார் பொறுப்பு என்பதில் தெளிவின்மை ஒரு முக்கிய பிரச்சனையாகும் (எடுத்துக்காட்டு- 2021 வரவுசெலவுத்திட்டம்)

**வரவுசெலவு திட்டங்களின் கீழ் நிதி அமைச்சரால் முன்மொழியப்பட்ட புதிய திட்டங்களுக்கு தேவையான நிதி உதவிகளை ஒதுக்குவது தேசிய வரவுசெலவுதிட்ட திணைக்களத்தின் (NBD) பொறுப்பாகும்.**

பட்ஜெட் வாக்குறுதிகளுக்கு பொறுப்பான அரசாங்க அதிகாரிகளை அடையாளம் காண, **தே.வ.தி** (NBD) இடம் த.அ.உ( RTI) கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

த.அ.உ( RTI) களுக்கு தே.வ.தி (NBD) அளித்த பதிலின் அடிப்படையில், 33 RTIகள் சம்பந்தப்பட்ட அரசு நிறுவனங்களில் தாக்கல் செய்யப்பட்டன.

அதில் 58% ஆனவை சரியான பொறுப்பான அதிகாரியை அடையாளம் காண்பதற்கு முன்பு ஒரு முறையாவது மாற்றப்பட்டது.





குறிப்பு: தகவல் அறியும் உரிமை (RTI)
மூலம்: அரசாங்க நிறுவனங்களில் தாக்கல் செய்யப்பட்ட தகவல் அறியும் உரிமை கோரிக்கைகளுக்குப் பதிலாக பெறப்பட்ட தகவலின் அடிப்படையில், வெரிட்டே ரிசர்ச்சின் கணக்கீடுகள்
நிதி அமைச்சு- தேசிய வரவுசெலவு திட்ட திணைக்களத்தின் செயல்பாடுகள் மற்றும் பொறுப்புகள்

All Rights Reserved © 2023
Verité Research

# தகவல் வெளிப்படுத்தாததால், ரூபா 49.5 பில்லியன் மதிப்புள்ள 71% செலவு திட்டங்களின் முன்னேற்றத்தை கண்காணிக்க முடியவில்லை.

வரவுசெலவுத்திட்ட வாக்குறுதிகள் 2022 (இடைக்காலம்): முன்னேற்றம்





மூலம்: சம்பந்தப்பட்ட அமைச்சுகளில் தாக்கல் செய்யப்பட்ட RTI கோரிக்கைகளின் அடிப்படையிலான தகவல்கள்
குறிப்பு:: 2022 (இடைக்கால) வரவுசெலவுத்திட்ட வாக்குறுதிகள் 24 சிறந்த செலவின முன்மொழிவுகள் மற்றும் 5 ஒழுங்குமுறை முன்மொழிவுகளை கவனிக்கிப்படுகின்றன.||

All Rights Reserved © 2023
Verité Research

# தகவல் வெளிப்படுத்தாததால், ரூபா 49.5 பில்லியன் மதிப்புள்ள 71% செலவு திட்டங்களின் முன்னேற்றத்தை கண்காணிக்க முடியவில்லை.

**வரவுசெலவுத்திட்ட வாக்குறுதிகள் 2022 (இடைக்காலம்): வெளிப்படைத்தன்மை**




மூலம்: சம்பந்தப்பட்ட அமைச்சுகளில் தாக்கல் செய்யப்பட்ட RTI கோரிக்கைகளின் அடிப்படையிலான தகவல்கள்
குறிப்பு:: 2022 (இடைக்கால) வரவுசெலவுத்திட்ட வாக்குறுதிகள் 24 சிறந்த செலவின முன்மொழிவுகள் மற்றும் 5 ஒழுங்குமுறை முன்மொழிவுகளை கவனிக்கிப்படுகின்றன.||

All Rights Reserved © 2023
Verité Research

# திறந்த வரவுசெலவுத்திட்ட கணக்கெடுப்பு 2021: இலங்கையின் செயல்திறன்

**வரவுசெலவுத்திட்ட ஆவணங்களை வெளிப்படுத்துதல்
(திறந்த வரவுசெலவுத்திட்ட சுட்டெண்)**

30 / 100

**வரவுசெலவுத்திட்ட கண்காணிப்பு
(சட்டமன்றம் மற்றும் கணக்காய்வு நிறுவனம் மூலம்)**

57 / 100

**வரவுசெலவுத்திட்ட செயல்பாட்டில் பொதுமக்கள் பங்கேற்பு**


19 / 100

*2021 தி.வ.க (OBS)க்கு பயன்படுத்தப்பட்ட நாடுகளின் மொத்த எண்ணிக்கை: 120*

All Rights Reserved © 2023
Verité Research

# பல ஆண்டுகளாகவே வரவுசெலவுத்திட்டத்தின் வெளிப்படைத்தன்மை குறைந்துள்ளது

திறந்த வரவுசெலவுத்திட்டத்தின் சுட்டெண் (OBI) மதிப்பெண் மற்றும் தரவரிசை: இலங்கை




All Rights Reserved © 2023
Verité Research

* திறந்த வரவுசெலவுத்திட்டத்தின் சுட்டெண் (OBI) மதிப்பெண் முறை மாற்றம் - 2015

# 6. தேசிய வரவுசெலவுத்திட்டத்தில் ஊடகவியலாளர்களின் ஈடுபாடு

All Rights Reserved © 2023

# வரவுசெலவுத்திட்ட சுழற்சி குறித்த பொதுமக்களின் விழிப்புணர்வை மேம்படுத்துதல்

**1. வரவுசெலவுத்திட்டத்தை வடிவமைத்தல்**

- *செயல்முறை மற்றும் அதன் சிக்கல்கள் பற்றிய உரையாடலை உருவாக்குதல்.*

**2. வரவுசெலவுத்திட்டதிற்கான ஒப்புதல் பெறல்**

- *வரவுசெலவுத்திட்ட உரையைப் பற்றி மட்டுமின்றி, ஒட்டுமொத்த வரவுசெலவுத்திட்ட்ம் பற்றிய பரந்த பொது உரையாடலை ஊக்குவித்தல்.*
- *அளவிடப்படாத அல்லது நம்பத்தகாத மதிப்பீடுகளை முன்னிலைப்படுத்துதல்.*

**3. வரவுசெலவுத்திட்டத்தை செயல்படுத்துதல்**

- *வரவுசெலவுத்திட்டத்தை செயல்படுத்தல் முன்னேற்றத்தை அவ்வப்போது கண்காணித்தல் (வெரிட்டே ரிசர்ச்சின் வரவுசெலவுத்திட்ட உறுதிமொழிகள்; COPE, COPA, DPMM மற்றும் கணக்காய்வு அறிக்கைகள்)*
- *வரவுசெலவுத் திட்டத்தில் (COPE, COPA, DPMM மற்றும் கணக்காய்வு அறிக்கைகள் போன்றவை) அடையாளம் காணப்பட்ட முறைகேடுகள் மற்றும் தவறான நிர்வாகத்தை முன்னிலைப்படுத்துதல்.*

**4. வரவுசெலவுத்திட்டத்தை மேற்பார்வை செய்தல்**

- *கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பல ஆண்டுகளாக கவனிக்கப்படாத வினவல்கள்/கண்டுபிடிப்புகளைப் பின்தொடர்தல்*

All Rights Reserved © 2023
Verité Research

# 07. மாகாண வரவுசெலவுத்திட்ட சுழற்சி

All Rights Reserved © 2023
Verité Research

# மாகாண வரவுசெலவுத்திட்ட சுழற்சி




**1. உருவாக்கம்**

மாகாணத் திணைக்களங்களின் தலைவர்கள் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் வருமான / செலவின மதிப்பீடுகளைத் தயாரிப்பதுடன், இவை உதவிப் பிரதம செயலாளரினால் தொகுக்கப்படும்

**2. உள்ளக மீளாய்வு மற்றும் அங்கீகாரம்**

மதிப்பீடுகள் முந்தைய ஆண்டின் உண்மையான பெருமதியுடன் பிரதம/ உதவிப் பிரதம செயலாளர்கள் மற்றும் முதலமைச்சரினால் ஆய்வு செய்யப்படும்.

மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களின் திட்டங்கள் கருத்தில் கொள்ளப்படுவதுடன், மாகாண சபையின் திட்டப் பணிப்பாளரிடம் பரிந்துரைக்கப்படும்.

செலவு மதிப்பீடுகள் இறுதி செய்யப்பட்டதும் அவை மாகாண சபை முதலீட்டுத் திட்டத்தில்(வரைவு மதிப்பீடு) உள்ளடக்கப்படுவதுடன் முதலமைச்சரினால் ஒப்புதல் அளிக்கப்படும்.

**3. நிதி ஆணைக்குழுவின் மீளாய்வு**

உதவி பிரதம செயலாளர் யூன்/யூலையில் வரைபு மதிப்பீடுகளை நிதி ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைப்பார். கலந்துரையாடல்களை முன்வைப்பதற்கு பிரதம செயளாலர் மற்றும் மாகாண சபையின் சி ரேஷ்ட உறுப்பினர்களுக்கு ஆ ணைக்குழு அழைப்பு விடுக்கும்.

**4. திறைச்சேரியுடனான பேச்சுவார்த்தை**

மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்படும் வரவுசெலவுத் திட்டத்தின் பங்கு குறித்து பேச்சுவார்த்தை நடத்த தேசிய வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகத்தை (நிதி அமைச்சு) சந்திக்கும்

**5. பரிந்துரைகள்**

மாகாண சபைகளுக்கான தற்காலிக ஒதுக்கீடுகள், நிதி அமைச்சர் மற்றும் ஜனாதிபதிக்கு பரிந்துரைகளை நிதி ஆணைக்குழு அறிவிக்கும்

**6. உருவாக்கம்**

இறுதி சமர்ப்பிப்பு - அசல் வரைபு மதிப்பீடுகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் வருடாந்த நிதி அறிக்கை மாகாண சபையின் பொறுப்புச் சபையில் ஆளுநரால் சமர்ப்பிக்கப்படும்

மூலம்: வரவுசெலவுத்திட்ட சுருக்கம்: சுழற்சி மற்றும் செயல்முறைகள் - இலங்கை 2019 (https://www.unicef.org/srilanka/media/1696/file/BUDGET%20BRIEF:%20CYCLE%20&%20PROCESSES.pdf)

All Rights Reserved © 2023
Verité Research

# மாகாண வரவுசெலவுத் திட்ட சுழற்சியின் செயல்முறை: மாகாண வரவுசெலவுத் திட்ட தயாரிப்பு செயல்முறையின் அடிப்படை படிகள் பின்வருமாறு


| | |
|---|---|
| படி 1<br>ஜனவரி – பெப்ரவரி | நிதி ஆணைக்குழு (FC) மாகாண சபைகளின் மீண்டெழும் மற்றும் மூலதனத் தேவைகளைக் கண்டறிவதற்கான வழிகாட்டுதல்களை வெளியிடல். |
| படி 2<br>ஏப்ரல் – மே | மாகாண திணைக்களத் தலைவர்களால் பிரதி பிரதம செயலாளரால் தாக்கல் செய்யப்பட்ட வருமான/செலவு மதிப்பீடுகளைத் தயாரித்தல். |
| படி 3<br>மே – ஜூன் | தலைமை/துணை தலைமைச் செயலாளர் மற்றும் முதலமைச்சரால் மதிப்பீடுகளின் உள்ளார்ந்த மதிப்பீடு மற்றும் ஒப்புதல் வழங்குதல். |
| படி 4<br>ஜூன் – ஜூலை | நிதி ஆணைக்குழுவின் (FC) மாகாண சபை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து வருடாந்த தேவை மதிப்பீட்டை மதிப்பாய்வு செய்து உறுதிப்படுத்தல். |
| படி 5<br>ஆகஸ்ட்– செப்டம்பர் | நிதி ஆணைக்குழு (FC) ஜனாதிபதி மற்றும் தேசிய வரவு செலவுத் திணைக்களத்துக்கு (NBD) மாகாண மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினத் தேவைகள் குறித்து பரிந்துரை செய்தல். |
| படி 6<br>செப்டம்பர் –<br>ஒக்டோபர் | நிதி ஆணைக்குழு (FC) மற்றும் தேசிய வரவு செலவுத் திணைக்களத்துக்கு (NBD) இடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்று முடிவாக்கப்பட்ட ஒதுக்கீடுகள் ஒதுக்கீடு சட்டமூலத்தில் சேர்க்கப்படல். |
| படி 7<br>நவம்பர் | நிதி ஆணைக்குழுவினால் (FC) நிதி அமைச்சுக்கும் ஜனாதிபதிக்கும் பரிந்துரைக்கப்பட்ட இறுதி ஒதுக்கீடுகள் பற்றி மாகாண சபைகளுக்குத் தெரியப்படுத்துதல். |
| படி 8<br>டிசம்பர் | அரசாங்கத்தின் தேசிய வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர், நிதி ஆணைக்குழு (FC) மாகாணங்களுக்கிடையில் மாகாணங்கள் மற்றும் திணைக்களங்களுக்கு ஒதுக்கீடுகளை அமைச்சர்கள் மற்றும் மாகாண மட்டத்தில் உள்ள மற்ற உயர் அதிகாரிகளின் பரிந்துரைகளின் அடிப்படையில் விநியோகித்தல். |
| படி 9<br>டிசம்பர் | ஒவ்வொரு மாகாணத்தின் பிரதான அமைச்சர் – மாகாண மட்டத்தில் நிதிக்கு பொறுப்பான அமைச்சராக – இறுதி மாகாண வரவு செலவுத் திட்டத்தை அமைச்சரவையில் சமர்ப்பித்தல். அதன் பின்னர் ஆளுநரால் வருடாந்த நிதிநிலை அறிக்கை, மாகாண சபைக்கு ஆளுநரால் வருடாந்த நிதிநிலை அறிக்கை சமர்பிக்கப்படல். |

மூலம்: UNICEF, இலங்கை. வரவு செலவுத்திட்ட சுருக்கம்: சுழற்சி மற்றும் செயல்முறை. இலங்கை. 2019 | வரவு செலவுத்திட்ட சுழற்சி செயல்முறைக்கு தொடர்புடைய சிரேஷ்ட அதிகாரிகளுடன் முக்கிய தகவலறியும் நேர்காணல்கள்

All Rights Reserved © 2023
Verité Research

# மாகாண வரவுசெலவுத்திட்ட சுழற்சியில் ஈடுபட்டுள்ள பிரதான நிறுவனங்கள்

*காட்சி 1: வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டில் ஈடுபட்டுள்ள முக்கிய அரசு நிறுவனங்கள்*




***குறிப்பு:** நிதி அமைச்சு: (தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களம் (NBD), தேசிய திட்டமிடல்திணைக்களம் (NPD) மற்றும் வெளி வளத் திணைக்களம் (ERD), நிதிக் கொள்கைத் திணைக்களம் (FPD) )*

*மூலம்: நிதி அமைச்சு, மாகாண சபை அதிகாரிகள் மற்றும் வரிசை அமைச்சுகளின் அதிகாரிகளுடன் நடாத்தப்பட்ட முக்கிய தகவலறிந்த நேர்காணல்கள்| ஆசிய அபிவிருத்தி வங்கி. பொது நிதி முகாமைத்துவ அமைப்புகள். 2018. | நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு. 2011. ஒரு வழிகாட்டி: வரவு செலவுத்திட்டம்| யுனிசெஃப் செலவுத்திட்ட சுருக்கம்: செலவுத்திட்ட சுழற்சி மற்றும் செயல்முறைகள். 2019*

All Rights Reserved © 2023
Verité Research

# மாகாண சபைகளுக்கு நிதியளிக்கப்படும் பிரதான வழிமுறைகள்

- வரி வருமானம்
- வரி அல்லாத வருமானம்
- வெளிநாட்டு உதவி
- வெளிநாட்டு கடன்கள்

மத்திய அரசின் வரவு செலவுத்திட்டம்

மத்திய செலவின முகவர்கள் (SA)

*1. மாகாண சபைகளுக்கு மத்திய அரசினால் வழங்கப்படும் மானியங்கள்*

- நிலையான ஏற்பாடுகள்
- அளவுகோல் அடிப்படையிலான ஏற்பாடுகள்
- குறிப்பிட்ட மாகாணத்திற்கான அபிவிருத்தி ஏற்பாடுகள்
- வருமான செயல்திறனை மேம்படுத்துவதற்கான ஏற்பாடுகள்

*2. மாகாண சபைகளுக்கான மத்திய அரசாங்கத்தின் ஒதுக்கீடுகள்/மாற்றல்கள்*

- தேசத்தை கட்டியெழுப்பும் வரி *(NBT): 33.33%*
- முத்திரை கட்டணம்: *100%*
- வாகனப் பதிவு: *70%*

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிகள் நிறுவனங்கள்

*3. மாகாண சபைகளின் பகிர்ந்தளிக்கப்பட்ட சொந்த வருமான மூலங்கள்*

- மாகாண சபைகள் 20 வருவாய் ஆதாரங்களைக் கொண்டுள்ளன. முதல் மூன்று பகிர்ந்தளிக்கப்பட்ட வருமான மூலங்கள்
  - மோட்டார் வாகன பதிவுக் கட்டணம்,
  - முத்திரை கட்டணம்
  - நீதிமன்ற அபராதம்

குறிப்பு: வரவுசெலவுத்திட்டத்தில் உட்படுத்தப்படாதவை : அரசு சாரா வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு உதவிகளிலிருந்து நிதியுதவி (உ.தா. குழந்தைகள், சமூக பாதுகாப்பு மற்றும் நீர்)

மூலம்: நிதி அமைச்சு, மாகாண சபை அதிகாரிகள் மற்றும் வரிசை அமைச்சுகளின் அதிகாரிகளுடன் நடாத்தப்பட்ட முக்கிய தகவலறிந்த நேர்காணல்கள்| | *UNICEF* வரவுசெலவுத்திட்ட சுருக்கம்: கல்வித் துறை. *2019*| கல்வித் திட்டமிடல் மற்றும் முகமைத்துவம் பற்றிய ஆய்வு. தேசிய கல்வி ஆணைக் குழு. *2016*| | *UNICEF* வரவுசெலவுத்திட்ட சுருக்கம்: *WASH* துறை. *2021*|நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் *2016-2023* | நிதி ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை *2016-2019*

All Rights Reserved © 2023
Verité Research

# தெரிந்து கொண்ட விடயங்கள்

1 வரவு செலவுத்திட்ட உரையானது ஒட்டுமொத்த வரவு செலவுத்திட்டத்தில் ஒரு சிறிய பகுதியை மட்டுமே கொண்டுள்ளது. ஒதுக்கீட்டு மசோதா மற்றும் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் வருடாந்த வரவு செலவுத்திட்டத்தின் முக்கிய அம்சங்களை உருவாக்குகின்றன.

2 வரவு செலவுத்திட்ட இலக்குகள் பெரும்பாலும் அடையப்படாமல் இருப்பதால், வரவு செலவுத்திட்டத்தில் செய்யப்பட்ட அனுமானங்கள் மற்றும் மதிப்பீடுகளை ஆராய்வது முக்கியம்.

3 ஊடகங்கள் வரவு செலவுத்திட்ட அங்கீகாரம் வழங்கும் கட்டத்தில் கவனம் செலுத்த முனையும் அதே வேளையில், வரவு செலவுத்திட்ட அமுலாக்க கட்டத்திலும் சமமான அல்லதை விடவும் கூடுதலாக கவனம் செலுத்துவது மிக முக்கியமானது.

4 கணக்காய்வாளர் நாயகம் மற்றும் திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் *(DPMM)* போன்ற பொது நிதி மேற்பார்வை நிறுவனங்களின் குரல்களை வலுப்படுத்துவதில் ஊடகவியலாளர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் *(CSOs)* முக்கிய பங்கு வகிக்கின்றன. வரவுசெலவுத் திட்டச் சுழற்சியின் அனைத்து நிலைகளிலும் வரவுசெலவுத் திட்டத்தை நிறைவேற்றுதல் மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றில் அரசாங்கப் பொறுப்புக்கூறலைப் பரிந்துரைக்கும் பொறுப்பும் அவர்களுக்கு உள்ளது.

*© Verité Research 2021.* பங்கேற்பாளர்களுக்கு மாத்திரமே அணுகல் வழங்கப்படுள்ளது தயவுசெய்து பகிர வேண்டாம்.

All Rights Reserved © 2023
Verité Research

# நன்றி!

All Rights Reserved © 2023
Verité Research